

திருச்சுழியில் திருச்சுழி வடக்கு ஒன்றியத்தின் சார்பாக நான்காம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் தங்கபாண்டியன் திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரை ஆற்றினார். இதில் ஒன்றிய அவைத் தலைவர் அழகன் தலைமை தாங்கினார். திருச்சுழி தெற்கு ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி முன்னிலை வகித்தார். திருச்சுழி வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தன பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார். இந்த நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் பொன்னரசு சிறப்புரை வழங்கினார்.



கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, காயாமொழி, காயல்பட்டினம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற ”நாடு போற்றும் நான்காண்டு. தொடரட்டும் இது பல்லாண்டு எனும் தலைப்பிலான பொதுக் கூட்டத்தில் கழக அரசின் நான்காண்டு சாதனை கூட்டத்தில் மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் பேசினார். உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ் நகரச் செயலாளர் வாள் சுடலை, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவலக வளாகத்தில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்நாட்டு விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மூ.பூமிநாதன் ஆகியோர் உள்ளனர்.




கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் 4 ஆண்டு சாதனைகளை விளக்கிடும் வகையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி சார்பில் நடைபெற்ற ”நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் சேக்மீரான் தலைமையில் மாநகர செயலாளர் ஆனந்த் முன்னிலையில் மாவட்ட செயலாளர், மேயர் ரெ.மகேஷ், தலைமைக் கழக பேச்சாளர் அன்பழகன் கலந்து கொண்டு திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் பன்னீர் செல்வம், ஜீவா, துரை உட்பட மாநகர நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் – II (20242025) கீழ் இளந்திரைகொண்டான் ஊராட்சியில் அமைக்கப்பட்ட நியாய விலைக்கடையை எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் பேசிய எம்.எல்.ஏ., இந்த நிதியாண்டில் இராஜபாளையம் தொகுதியில் புதியதாக 10 நியாய விலைக்கடை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் தொடக்க விழா நடைபெறவுள்ளது எனக்கூறினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ், கிளர்க் சீனிவாசன், ஒன்றிய துணை செயலாளர் மலர்மன்னன், மாணவரணி அஜீத்குமார், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் பண்டாரசாமி அ.தி.மு.க.வில் இருந்து விலகி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.



கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, தூத்துக்குடி மாநகரம் முத்தையாபுரம் மற்றும் திரேஸ்புரம் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற ”நாடு போற்றும் நான்காண்டு. தொடரட்டும் இது பல்லாண்டு எனும் தலைப்பிலான பொதுக்கூட்டங்களில் கழக அரசின் நான்காண்டு சாதனைகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் விளக்கி உரையாற்றினார். உடன் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்த சேகரன்,மாவட்ட துணை செயலாளர் ராஜ்மோகன் செல்வின்,கழக பேச்சாளர்கள் நெல்லை கவிஞர் மூர்த்தி துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ்,மாமன்ற உறுப்பினர் பாலகுருசாமி,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பி. அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பாக வெண்ணீர் வாய்க்கால் கிருஷ்ணாபுரத்தில் நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் கோவிந்தராஜ் வரவேற்பு பேசினார். க்கூட்டம் வனம் மற்றும் கதர் கிராம தொழில் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட தலைமைக் கழக பேச்சாளர் சுகந்தி, கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இக்கூட்டத்தில் முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் சுப த . திவாகரன், மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் , பூபதி மணி,ஆப்பனூர் ஆறுமுகவேல், சண்முகநாதன், மற்றும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சத்தியந்திரன், முதுகுளத்தூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரஞ்சித் மணிகண்டன் மற்றும் மாநில மாவட்ட நகர பேரூர் கழக ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# தீவிரவாதச் செயல்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு!

## அனைத்து கட்சித் தலைவர்கள் உறுதி!

புதுடெல்லி, மே 9–

தீவிரவாத செயல்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என டெல்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேசன் சிந்தூர் தாக்குதலைத் தொடர்ந்து, புதுடெல்லியில் ஒன்றிய அரசு நேற்று அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டியது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, ஜெய்சங்கர், ஜே.பி. நட்டா, நிர்மலா சீதாராமன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதேபோல், காங்கிரஸ் கட்சி சார்பில் மல்லிகார்ஜீனா கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, திமுக சார்பில் டி.ஆர்.பாலு உள்ளிட்ட அனைத்து கட்சியினரும் கலந்துகொண்டனர். கூட்டத்தில், ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் குறித்து ஒன்றிய அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அப்போது அனைத்து கட்சிகள் சார்பில் ஒன்றிய அரசிடம் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என உறுதியளித்தனர். முக்கியமான இந்த கூட்டத்தில் பிரதமர் பங்கேற்காதது ஏன் என எதிர்க்கட்சிகள் சார்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

கூட்டத்துக்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு, ராணுவத்தின் நடவடிக்கைக்கு நாடே தலை வணங்குவதாக தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வை. மகாவிஷ்ணு**

**மே 10 (2007)**



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**